

உ

ஓம்.

தத்ஸத்

ஸ்ரீவிஜயமங்கலத்திலுள்ள ஸ்வாமிகளின்
மீது பாடிய

# பஜநாமிர்த
# பக்திரசக் கீர்த்தனம்

திருவாளர் V. R. ஷண்முக முதலியார்
விருப்பத்திற்கிணங்கி
இஃது
உடுமலைக்குறிஞ்சி
**குமாரானந்த ஸ்வாமிகளால்,**
இயற்றப்பெற்று.

செவ்வாய்ப்பேட்டை கோல்டன் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.
1933

7-MAR 1933
1328
௨:38·2M VM
N33
176657

# முகவுரை.

இயற்கை வளம் பொருந்தியது இந்திய நாடு. கடவுள் மதம்இவ்விரண்டே இந்நாட்டு மக்களின் ஜீவநாடி இன்னாட்டிற் பற்பல பாஷை பேசும் பல பிரிவுடையாருண்டு. நாடுகள் தோரும் பாஷைகள் வேறாயினும், மதமும் கடவுளும் ஒன்றே. வேங்கடம் முதல் குமரி முனைவரை எல்லையாகப் பெற்ற தமிழகமே தலைசிறந்த தென்பதற்கு பல ஆதாரங்களுண்டு. வடமொழியின்பால் ஏனைய பாஷைகள் தோன்றிய தென்பார் ஒருசாரார். தமிழ் தனிப்பெரும் பாஷையென்பார் ஒரு சாரார். ஆராயுமிடத்து தமிழ் தனிப்பெருஞ் சிறப்புடைய தென்பதற்கு (அகரமுதலெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு) என்ற தெய்வப்புலமையார் திருவாக்கும், இலக்கிய இலக்கணவலுக்கொண்டு இந்நாட்டில் மிளிரும் பழம்பெரும் பஞ்சகாவிய நூல்களாகிய சங்க நூல்களும், பக்திப் பெருக்குற்று விளங்கும் இசை நூல்களுமே போதிய சான்றாகும். தமிழ் மொழியானது இயல் இசை நாடகமென்னும் மும் முறையாகப் புலவர் பெருமக்களால் கையாளப்பட்டுவந்தன இருபதாம் நூற்றாண்டில் நம் நாடு மதச்சிக்கலின்றிய தமிழ் மணங்கமழ்ந்திருந்தது. ஆரியமக்கள் நம் நாட்டிற்குக் குடியேறிய காலமுதலே தமிழ் பாஷை மதச்சண்டைக்கு இலக்காயின. பண்டைக்கால அரசியல் மாறி ஆங்கில ஆட்சிதோன்றி ஆங்கிலமாது அரசியல் பாஷையாக ஆட்சி பெற்றதும் தமிழ்த்தாய் தன்னை ஆதரிப்பாரின்றி வலிகுன்றித் தவிக்கலானாள். தமிழ் மக்களும் தமிழினிடத்தன்பிலாராயினர் ஒரு சிலர் தமிழறிய அவாவுற்று முன்வரினும் புராணாதாரங்கொண்டு தமிழாராய்வோர் மதப்பித்தேறி வைராக்கிகளாகின்றனர் சங்க நூல்களாகிய பொது நூலாதாரங்கொண்டு தனித்தமிழாராய்வோர் மதப்பித்தின்றி சமரச நோக்குண்டு தமிழ் மணஞ் சிறக்க ஆசைப்படுகின்றனர். தமிழ்ச் சுவை அறியா மக்கள் தோன்றிய இக்காலத்து மக்களின் மனநிலைக்கேற்ப தமிழ் மொழி பரப்ப முன்வரும் புலவோர் ஒருசிலரே. மக்கள் நிலையுணர்ந்தே அருளுடைத்தோன்றல் ஸ்ரீமத் அருணகிரியாரும் தமது பக்திப்பெருக்கை சந்தப் பாக்களின் மூலம் தந்துதவினார். இவ்வாதாரம்பற்றியே இக்கால வாலிப மக்களின் மனோநிலைக்கேற்ப அருணகிரியாரிடத்து மாறாத அன்பு பூண்டொழுகும் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி குமரானந்தமவர்களும் தமிழ் மொழிபரப்ப இன்பச்சுவை ததும்பும் இசைப்பாக்களியற்றி உதவுவாராயினர். பஜனாமிர்த பக்திரசக்கீர்த்தனையென்னும் இக்கீர்த்தனாசிரியர் ஸ்வாமி குமரானந்தம் அவர்களை சுமார் 15 ஆண்டுகளாக எனக்குத்தெரியும். இவர் அறிய சிறுவயதிலேயே தமிழாராய்ச்சி பெற்றவர். இவர் மதபேதம் தெய்வ பேதம் என்ற குறுகிய நோக்கமற்ற பரந்த சமரச நோக்க முடையார். சிறிய வயதாயினும் முருகன் அருள்பெற்று சந்தப்பாக்களும் கீர்த்தனங்களும் வெண்பாக்களும் சொல்லும் இயற்கையறிவுடையார் எத்துணை ஆராய்ச்சியில் வல்லுனராயினும், காவிய நூலியற்றும் கவிப்புலவராயினும், இசைப்பாக்களியற்றுவது முருகன்

அருள்பெற்ற ஒரு சிலருக்கே அமைவுரும். இவர் நந்தனர் சரித்திரம்
பவானி மகத்துவம், பாசுரசேகரம், குறிச்சி நவமணித்தோத்திரம் துடுப்பதி
நவமணித்தோத்திரம் அண்ணாமலை கார்த்திகைதீப தரிசனதோத்திரம் என்
னும் பல கீர்த்தனங்கள் பாடி தக்கார் ஆதரவுகொண்டு அச்சியற்றியுள்ளார்.
தமிழபிமான முடையோர் எவரும் புராணம்படித்து பாடிய புராணங்களை
யே திரும்பப்பாடும்லக்ஷணகவிகளையே விரும்புவர். இடர்ப்பட்ட கடின கவி
களுக்கு அடிக்கொரு அருத்தம் சொல்லிக்காலத்தை வீணாக்குவதை இக்
கால உலகம் ஏற்காது. பண்டைக்காலத்தைப்போல் லக்ஷணக்கவித்திறன்
கண்டு அருங்கவிப்புலவோருக்கு அள்ளிக்கொடுக்கும் வள்ளல்களுமிக்கா
லத்தருமை வறுமையிலுளன்று அரசனை நாடிப் பணமது கேட்கும் புல
வோர்தமக்கு தலைதனைக்கொடுக்க தற்காலத்தில் குமணனுமில்லை. பாடும்
புலவர் பாதாம்புயத்தைச் சூடும் குலோத்துங்கசோழன் போன்றாரும் இக்
காலத்திலில்லை. இவைகண்டே ஸ்வாமிகள் சங்கீத ஆசை வாயிலாகவா
வது இக்கால வாலிபர்கள் தமிழுணருமாரு இசைப்பாட்டியற்றுவதே தமது
கடமையாகக்கொண்டனர். இம்முறையே சாலச்சிறந்ததெனலாம். சாந்தி
நிகேதன ஆசிரம அமைப்பாளரும் ஆங்கிலக்கவியரசருமான மகாகவிடாகூ
ரவர்களும் தமது ஒப்பற்ற அபிப்பிராயங்களை நாடகரூபமாக உலகிற்கு உத
விவருகின்றார். இவை நிற்க விஜயமங்கலம் என்னும் க்ஷேத்திரம் பாரத
காலந்தொட்டு சிறப்புற்று விளங்குவதாக சரித்திரங்களும் சிலாசாசனங்க
ளும் உண்டு. இங்கு சிவ, விஷ்ணு ஆலயங்களும், திற்காலங்களும், உண்டு
அருணகிரிநாதராலும் பாடல் பெற்றஸ்தலமாகும். இங்கு பூர்வீகமான
பெரிய சைனாலயமும் ஒன்றுளது' நாவலர் குழாத்திற் பெரும்புகழ் பெற்ற
கருணமிர்த கார்மேகக் கவிச்சிங்க நாவலர் பிறப்பிடமுமாகும். இத்திவ்ய
க்ஷேத்திரத்திற்கு இக்கீர்த்தனசிறிய ஸ்வாமிகளது வரவு நேர்ந்தகாலத்து
இவ்வூர் செங்குந்த வாலிபசன்மார்க்க சங்கத்தின் பஜனைக்கோஷ்டி அங்
கத்தினர்கள் இப்பஜனமிர்த பக்திரசக்கீர்த்தனம் பாடுமாரு கேட்டுக்கொண்
டனர். அதற்கிணங்கி ஸ்வாமிகளும் வாலிபமக்கள் தமிழருமையும் சன்
மார்க்கமும் பக்திப்பெருக்கும் அடையுமாறு இக்கீர்த்தனம் பாடியுள்ளார்
இவரது கீர்த்தனைகளின் அமைப்பின் அருமை காண்போர் எவரும் இவ
ரது கல்வித்திறன் உணர்வாராதலின் யான் இவர்திறனுணர்த்துதல்மிகை
யேயாகும் இவரது பேரூழியம் நாடெங்கும் பெருகுமாறு ஆங்காங்கு ஏனைய
ஊர்களிலுள்ள வாலிபர்கள் சுவாமிகளை ஆதரித்து இசைப்பாட்டியற்றுமாறு
ஊக்கிவைத்துக் தமிழ் மொழி பரப்ப முன்வருவார்களென நம்புகிறேன்.
இனிவருங்காலத்து ஸ்வாமிகளது கீர்த்தனங்களிலும் பழங்கால உவமானங்
கள் .அதிக மின்றிக் காலத்துக்கேற்ப உலக முன்னேற்றத்துக்குப் பொருத்
மாக அமையவேண்டுமென அவாக்கொண்டுள்ளேன். ஸ்வாமிகளது தமித
ழபிமானமும் பாஷாபிவிருத்திப் பிரசாரமும் இவ்வுலகில் எக்காலத்
தும் எதும் தடைவுறாது நீடூழி நிலைத்துவருமாறும், இவருக்கு நீண்ட ஆயு
ளையும் திடகாத்திரத்தையுங் கொடுத்தருளுமாறும் எல்லாம் வல்ல முருகக்
கடவுளை வழுத்துகின்றேன்.

S. A. கணேசன், காரியதரிசி,
செங்குந்த மஹாஜன சங்கம், ஈரோடு.

690 809.
1935
784.0951

ஓம்.

தத். ஸத்.

மகாகணபதியே நம:

176657

## ஸ்ரீ விநாயகர் ஸ்துதி.

வெண்பா

பூவிநுயர் விஜயமங்கலத்திற் பொற்புமிகுங்
கோவிநுயர் சாமிகளைக் கும்பிட்டு—பாவிநுயர்
பத்திரசக் கீர்த்தனங்கள் பாடவருள் புரிவாய்
மத்தகஜ மாமுகனின்—மாண்பு

92 ; 38:21NM NB

## பிள்ளையார் கீதம்.

(ஜெயராமாயென்ற மெட்டு.)

இராகம் நாட்டை] [தாளம் ஆதி

(1.) பல்லவி.

துணை நீயே—கணபதி (துணை)
துன்பமேகயின்பமாக சம்ப்ரமமுடன் சதாவுந் (துணை)

அநுபல்லவி.

மணமாகப்—புனமகில்
மங்களாகாரந் துலங்க விங்கிதமிகுங் குமாரன் (துணை)

சரணம்.

கஜமுகா வரகர புஜபலமொடுநிகழ்
விஜயமங்கலமதில் விந்தையாகவே
குமாரானந்தனின் பிரபந்தஞ் சூடும் (துணை)

---

## ஸ்ரீ நாகலிங்கமூர்த்தி ஸ்துதி,

(சாந்தி யென்ற சிங்கம் யென்ற மெட்டு)

இராகம் இந்துஸ்தான்] [தாளம் ஆதி

(2) பல்லவி,

நாகலிங்கமூர்த்தி நின் கீர்த்தி நானுரைத்தேன்
பூர்த்தி நற் சீர்த்தி (நா)

அநுபல்லவி,

பாகம மராவுடைய பார்வதி நேசா
தாகமுடனுகம விவேகவனுபோகா
சாதாரீ பாடினோ—விரகு விற்கத்தானுமோடினோ (நா)

தக்கபுகழேழும நாதன் வெட்கமாகவே
சொக்கலிங்கன் செய்த சூதென்று யேகவே
சுந்தரர்பாட வாரூரிற் றூது நீரோட (நா)

சரணம்.

சோமாசி மாரனுக்காமாம் வைகாசியில்
ஏமாந்து போகாமலீசனே நீசனாய்
ஏகயாகமதனி லன்பர்மா
காளமாககரில் (நா)

தாருகா வனமதனிலேலருமாராகவே
சோரு சோரென்று மடவார்கள் மயலாகவே
சன்யாசியாகப்போனீர்—வல்லாளன்
றனையனாகவே நீர் (நா

இங்கிதமிகும் புகலூர் சிங்க வுருவாகி முனம்
திங்கவாகீச முனியங்கமது நோகமனம்
எனக்கும் வலிக்கு தென்றூர்—ஈஸ்வரனே
தனக்கு மினிக்கு தென்றீர் (நா)

தங்கு செங்குந்தர் குலமங்களவலங்கிர்தநற்
றங்கமயமாய் விளங்குங்குறிஞ்சிக்க விஞ்ஞன்
சாற்றினேன் றமிழும்—விஜயநகர்
போற்றினேன் கமழும் அகமகிழும் (நா)

---

## ஸ்ரீகோவர்த்தனாம்பிகை ஸ்துதி.

சாந்தமு லேகா யென்ற மெட்டு.

இராகம் ஸாமா] [தாளம் ஆதி

(8) பல்லவி.

பூதல மீதிற்றாயே போற்றினேனுந்தன் சேயே
பூம்பதம் அருள்வாயே (பூ)

அனுபல்லவி

மாதவஞ்சூழ் விஜயமங்கலந்தன்னில் நீயே (பூ)

சரணம்.

கோவர்த்தனாம்பிகையே கோரிவந்தேன் மதியே
பாவத்தைத்தீர்ப்பாயே பரமகிர்பாநிதியே (பூ)

குந்தன்றமிட் குமரானந்தன் கும்பிடுந் தேவி
இந்திராதி தேவர் முதல் கந்தர்வர் நம்பும் கோவில் (பூ)

---

## ஸ்ரீகரியமாணிக்கர் ஸ்துதி.

(யெப்புடு கிர்பகல்குனு யென்ற மெட்டு.)

இராகம் முகாரி] [தாளம் ஆதி.

(4)

பல்லவி

பன்னகசயனனே கண்பாரும் பத்மநாபனே (ப)

அனுபல்லவி

மன்னவர்கள் சூழ்விஜயமங்கலத்தில் வாழ்பவனே
என்னுடைய வேதனை தீர்த்தின்பமளிப்பாய் சுபனே (ப)

சரணம்.

காதலுடன் பணிந்தேன் கரியமாணிக்க மூர்த்தி
கஞ்சமலர் மீதுற்ற வஞ்சிமருவுங் கீர்த்தி
ஓதுங்குமாரானந்தன் கீதம் பரவும் நேர்த்தி
உலகிலெனக்கு நவமணிகளருள்வாய் பூர்த்தி (ப)

---

## ஸ்ரீமகாலக்ஷ்மி ஸ்துதி.

(காமசுந்தராங்கி யென்ற மெட்டு.)

இராகம் இந்துஸ்தான் தேசிக தன்யாசி] [தாளம் ரூபகம்.

(5)

பல்லவி.

தாமரைமலர் மீதில் வாழுந்—தாயே
தருவாய் நவநிதி சரஸ்வதி துதி (தா)

அனுபல்லவித்திரள்.

சங்குசக்ரபாணி விஜயமங்கலத்தில் மருவுந்திருவே (தா)
சங்கடங்கள் தீருங்கோரும் வெங்கடேஸ்வரனின் பாரி (தா)
சதுர்முகனொடு முனிவர்களதி விதமுடனிருபதமதுபுகழ் (தா)
தஞ்சமென்று பஞ்சபாணன் கெஞ்சமகிழ்ந்தஞ்சலிக்கும் (தா)
ஜனகமகாராஜன் புத்திரி தசரத சுதராமபத்னி (தா)
சந்ததம் பதம்பணிந்து கந்து பாடவுந்துணிந்தேன் (தா)

சரணம்:

பூமியிலுனையன்றியாரு
புண்யசாலியே நீ பாரு
தாமதஞ்செய்யாமற் காரு
சரணஞ்சரணங் குமரானந்த
ஸ்வாமி தமிழைப்புனைகுவாய்செங் (தா)

## ஸ்ரீசோமேஸ்வரர் ஸ்துதி.

(தயவிலாதெதென்ன வஞ்சமென்ற மெட்டு)

இராகம் சுருட்டி] [தாளம் ஆதி

(6) பல்லவி.

சோமநாத நிருபதமே—சுயஞ்
ஜோதி வடிவஞ்சதமே—விகசிதமே (சோ)

அனுபல்லவி

வாமதேவர் முதல் யாரும்—விஜய
மங்கலந்தனில் இங்கிதம்பெரும்
மனம் கனம் தனம் ஜனம் வசிகர (சோ)

சரணம்

அங்கயற்கண்ணி மீனாக்ஷியின் பாகன்
ஆகம வேத புராண விவேகன்
சங்கமுத்தமிழ்க்குமரானந்தமோகன்
ஜண்பகந்திகழ்—பண்புடன் கமழ்
ஸ்தலந்தனில்—நலந்தரும்—தரிசனம் (சோ)

---

## ஸ்ரீ மீனாக்ஷியம்மன் ஸ்துதி

சிங்காரி யென்ற மெட்டு

இராகம்--தோடி] [தாளம்-ஆதி.

(7) பல்லவி,

மீனாக்ஷி நீசாக்ஷி சதுர்
வேதம் பரவுஞ் சோமநாதன் மருவுஞ் சுந்தர (மீனாக்ஷி)

அனுபல்லவித்திரள்

மேகவண்ணனின் றங்கையாக விளங்கு மலங்கிர்த (மீனாக்ஷி)
வித்தகர் மெச்சிய வுத்தமி நிர்க்குணி
முத்தமிழ் கற்ற மகத்துவர் முக்கனி (மீனாக்ஷி)
மிக மேவிய வறுபத்து நாலு திருவிளை
யாடற்பதி விகசித முடன் வளர் (மீனாக்ஷி)
மேன்மை தங்கும் மதுரை ராணியன்பர்
களிந்திராணி துதி செய்யுங்கல்யாணி
மிகவிற்பனர் தொழும் (மீனாக்ஷி)

சரணம்,

மாணிக்க மூக்குத்தி வதன வொய்யாரி
மலையத்து வஜ ராஜ பாண்டிய குமாரி
வாணிக்குயர் விஜய மங்கல வீரி
மகிழுடு மலைக்குறிஞ்சிக்—குமரானந்தன்
வணங்குமற்புதப்பெருஞ்சீர்—புகழுங்கவு
மாரிமனோன் மணி பார்வதி காரணி
ஸ்ரீ பரிபூரணி திருவருளாரணி (மீனாக்ஷி)

---

## பஜனா மிர்த பக்திரசக் கீர்த்தனம்

இராகம் கல்யாணி] [தாளம் ரூபகம்,

(8) பல்லவி.

விஜய மங்கலந்தன்னிற் பஜனை
மேன்மை யாக விளங்குமர்ச்சனை (விஜ)

அனுபல்லவி,

புஜபல மிகுந்தீர வீரபுண்யனாஞ் சுப்ரமண்ய னொய்யார (விஜ)

சரணம்,

தஜாரதமகா ராஜபுத்திரன் ஸாமவேத கீத மித்திரன்
கஜதுரகவினோத விச்சித்திரன்--கௌசிகன்
புகழ் ராம பத்திரன் (விஜ)
நாகலிங்க மூர்த்திக்ஷேத்திரம் நாரத மகாமுனிவர்
ஸ்தோத்திரம் ராகதாள சுதியின் காத்திரம் நவிலும்
மிர்தங்க வாத்திய நேத்ரம் (விஜ)
பத்ரகாளிதாசன் பாரேபாடினேன் குமரானந்தன் நேரே
வித்தகமாகத்துலங்குமிவ்வூரே
விஷ்ணுவினாயகர் சோமேசர்சீரே (விஜ)

---

## ஸ்ரீ சிவ சுப்ரமண்யர் ஸ்துதி,

தேடிவந்தேனே] [யென்றமெட்டு.

(இராகம் சிந்து பைரவி தாளம் ஆதி,)

(9) பல்லவி,

வேல்முருகோனே மறவேனே திரு
மால்மருகோனே மயின் மீதில்வருவோனே கதிர் (வே)

அனுபல்லவீத் திரள்,

வேடராணியானை பூணுங்கிரீடனேசங்தோடங்காணும்
விற்பனர் மெச்சிய வர்ச்சுன மாநகர்
அற்புதனே யறு முகசரவண பவ (வே)

விந்தை யாகவரமுந்தாவிடில் மிகுந்த
யோகமினி யெந்த நாளில் வடி (வே)

மிகவே யிகபரசுகமே புரிகுவாய்
ஜெகமீதக மகிழ்வுற வேதனையற (வே)

வேங்கை மறமெனவே விகசித முடன்
பாங்குபெற வுயர் பரணருகினில் நின்ற (வே)

வினையாவையு மகற்றிடுவா யிது தநி
ஜெனகாதியரொடு கனமாதவர் துதி (வே)

வெற்பிலுற்ற பரமற்கு முத்தி நெறி
சொற்பிரபுத்வ முளகற்பகத்தருவே (வே

மேடவாகனத்திலேரும் பீடமேமனத்திலோரும் (வே))
விருப்பமுடனே திருப்புகழணிந்திடும் பூமி
குருப்ப நாட்டிலெந்த நாளுங் காருஞ் சாமி (வே)

விரைவுடனசை நொடி தனில் வட
வரை கிடுகிடுவென வலம்வரும் (வே)

மிக்க பொற் கிளிக்கு ருக்க முற்று நற்பிரசித்தி பெற்ற
வீர சூர கோர பாரதீர மேவுந்தேவ தேவே (வே)

சரணம்

நாலு மறை மூலா நாகலிங்கன் பாலா
நாவலோர்கள் நவில் குமரானந்தன்
பாவமேகவே பகர்ந்திடவந்தன் (வே)

---

## திருப்புகழ் சந்தம்,

தனனதந்ததனனதந்ததனனதந்ததனனதந்ததனதான,

இராகம் இந்துஸ்தான் பியாக்கு,
தாளம் ஆதி

(10) கண்ணிகள்,

கவி புனைந்து வுனை நினைந்து மன முகந்து
தினமும் வந்து—தொழுதேனே
கருணையன்பு தருண மின்பு அருணையின் கண்

அடிமை முன்பு—வரவேவனும்
தவில் மிர்தங்கம் மிகமுழங்குந்தரணியெங்கும்
அருள் துலங்கும்—அதிதீரா
ஜனனதுன்பம் துவுமங்கத்தபவு கொஞ்ச
முனதுகஞ்சங்—தருவாயே
நவியின் மங்கை சுகிர்தமுங்கொள் நளின
மின்சொல் மருவு துங்க—மயில் வீரா
நரர்களெங்கு மரசனென்று நவிலுமெங்கள்
சிவனின் மைந்த—நிலேயோனே
செவியில் மந்ர மமிர்தமுஞ்சொல் ஜெப
மிலங்கு மணிகள் தந்து—அருள்வாயே
திசைவிளங்கும் விஜயமங்கை தினமு
மன்பர் தலம் விரும்பும்—பெருமாளே

---

## விஜயாபுரியம்மன் ஸ்துதி.

ஷண்முகா யேழை யென்மேல் யென்ற மெட்டு,

இராம் இந்துஸ்தான் தோடி] [தாளம், ஆதீ

(11) பல்லவி,

சந்ரவதனீ யென்மீதிற்றய வில்லையா
சைஸ்விதமாகத் தவயோகந் தாவே மலேயா (சந்திர)

அனுபல்லவித்திரள்,

தாயே விஜயாபுரிதனில் நீயேதருவாய் தரிசனந் (தய)
சத்திசவுமாரி வீரி முத்தமிழ் விநோதவாரி (தய)
தாரணியிலே மிகுத்த பூரணி கிர்பாகடாக்ஷந் (தய)
சக்ரபாணியின் சோதரிபக்வமாகவந்தாதரீ (தய)
சாமவேத கீதமோதவேதயாள போகமீயுந் (தய)
தகுமோ தெரிவாயிகபர சுகமேபுரிவாயிது தகி (தய)
தலத்திலுயர் மலர்க்கமல வனத்திலுரை மலேக்கவுரீ (தய)
சங்கம் புகழ் சிங்கந்தனி லெங்கும் பரவுந்தங்கமே (தய)
சகலர்க்கக நட்புருவித்தக மெய்ப்பொருணற் பிரணவி (தய)
தவமதிலுயர் முனிவர்களொடு புலவர்கள் பலரக மகிழ்வுருந்)
தஞ்சமென்று நம்பி வந்திறைஞ்சி நின்றேனன்பு கொஞ்சம்)
தத்வ ஞான வித்வமோன வஸ்த்து வான பத்ரகாளி (தய)

தந்தனந்தனந்த வென்று மைந்த நின் பதம் பணிந்தேன் ( )
சந்தானம் பாரிஜாதமுந் தாரும் பாரிலே
மிருந்தியானம் பூணவேபவந்திருங்கான வாணி (தய)

சரணம்

சிந்தூர நுதல்விழியே செப்பிடு வாயோர் மொழியே
க்ஷேமங்கண்டு லாபங்கொண்டு
சேவை செய்தே நேர்வழியே
தேவர்களிலே சிறந்த மூவர்களுமே யுகந்த
சிவ னொடுநட மாடுந் தேவி
தினகர னொளி நீடும் பூவில்
ஸ்ரீ குமரானந்தன் வாழியே
செல்வத்திருமகள் தங்கத்தான் கலைமகளொடுதிகழ்
கல்விக்கடலது பொங்கத்தான் கலியுகமிதில் வரும்
வல்விக்கினமது மங்கத்தான் உடுமலை நகர்வளர்
சொல்வித்துவர் சுவையங்கத்தான் கவியெனவறிகுவாய் (தய)

---

## ஸ்ரீ மகா முனீஸ்வரன் ஸ்துதி,

ஷடானனு யென்ற மெட்டு.

இராகம் கமாசு] [தாளம் ஆதி.

(12) பல்லவி,

மகாமுனீஸ்வரனே வரமருள் (ம)
வந்தனங்கள் செய்தேன்
சிந்தை மகிழ்ந்தன் பாய் (ம)

அனுபல்லவி

மிகவேதிகழ் விஜயாபுரிதனில்
விந்தயாகவே செங்குந்தர்புகழ்ந்தோதும் [ம)

சரணம்,

எந்த நாளும் நோய்கள் வந்திடாமற் காரும்
முந்தை நாளிற் கார்த்த முறை போற் கண் பாரும்
சந்ததங்குமரானந்தன் றமிழ் யாரும்
சாற்றவே பணிந்து போற்ற வினைதீரும் (ம)

---

## மகாபக்திவிசேடம் மங்களவாழ்த்து.

(பக்தி கொண்டாடுவோம் என்ற மெட்டு.)

இராகமாலிகை] [தாளம் ஆதி,

(13) பல்லவி.

பக்தியாய்ப்பாடுவோம்—தெய்வ (பக்தி)

அனுபல்லவித்திரள்.

பஞ்சலக்ஷண முணர்ந்த பக்குவர்கள்
கொஞ்சு முத்தமிழ்மிகும் பிரியப்பஜனை (பக்தி)
பார கோர சூரனைச்சம்மாரஞ்
செய்த குமாரனை (பக்தி)
பரமனுக்குப்பிரணவமதையுரை செய்தோன்
பிரமனைச்சிறையிலிட்ட வற்புதன்மேற் (பக்தி)
பாவை வள்ளி மோகமாகச்சேவை
செய்யுஞ் சேவலாளி (பக்தி)
பட்டிணத்துப்பிள்ளை சுதன் இட்டம் வைத்துரைத்த புகழ்
நெட்டையிற்காத்திலுற்ற சட்டதிட்டமென்றுணர்ந்து (ப)
பவக்கடலையகற்றுமொரு தவக்கிழவன் மகத்வமிகும் (பக்தி)
படனமாக நடனமாடுந் திடமயூரனடிகள் கோரி (பக்தி)
பாண்டியன் மருகனாண்டியின்பமுறுங்
காண்டிபன் பெயரைப்பூண்ட கன்னகரிற் (பக்தி)
பழனியில் வெகுபிரபலமிகு மழகிய சிவசரவணபவன் (பக்தி)
பாரில் மடமாதர்கள்சையோகமேயில்லாமல் நீளும்
பேரின்பவினோதமே பெருகமையலாக நாளும் (பக்தி)
பஞ்சக்கருவிகளஞ்சும் பரிவுடனுஞ்
சொற்பரிபுர வொலிகள் கலீரென (பக்தி)
பகர்தற்கறிதிப்புவியிற்சுக விற்பனர்
மெச்சியவுத்தமர் தத்துவ குரு (பக்தி)

சரணத்தொடர்.

சத்யமாக விருபத்ம பாதமதை நடத்திடாமலே மிகுத்த மோக முறும் நங்கையெங்கே சொந்த மங்கையெங்கே உந்தன் றங்கையெங்கே தாய் தந்தையெங்கே வெகு விந்தையெங்கே மிகு

ணைமந்தனெங்கே நாகரீக மெங்கே யேகபோகமெங்கே உத்தியோக
மெங்கே நல்ல நஞ்சை யெங்கே நிலம் பஞ்சை யெங்கே சொல்லும்
புஞ்சையெங்கே சப்ரமஞ்சமெங்கே பிரபஞ்சமெங்கே கன வஞ்ச
மெங்கே நம்நாடு மெங்கே ஆடுமாடுமெங்கே இன்பவீடு மெங்கே
யேறும் வண்டியெங்கே செல்லுந்தண்டியெங்கே கூருந்தொண்டி
யெங்கே வர்க்கநட்புமெங்கே ரொக்கம்வைப்புமெங்கே யுண்மை
செப்புமிங்கே மதயானையெங்கே ரதசேனையெங்கேபதமோனையெங்
கே பரிவேசமெங்கே பாடும் ராகமெங்கே உற்சாகமெங்கே தங்கக்க
ட்டியெங்கே வைக்கும் பெட்டியெங்கே வாங்கும் வட்டியெங்கே
கட்டுக்காவலெங்கே யோதும் நாவலெங்கே கூவுஞ் சேவலெங்கே
நவமணிகளெங்கே சொர்ணப்பணிகளெங்கே லாவணிகளெங்கே
பலர் கூட்டமெங்கே யாட்டபாட்டமெங்கே பார்க்கும் நோட்ட
மெங்கே வட்டப்பொட்டுமெங்கே வர்ணப்பட்டுமெங்கே மேற்ப
கட்டுமெங்கே வீசும் வாசமெங்கே செய்யும் மோசமெங்கே பே
சும்ரோஷமெங்கே கைத்துப்பாக்கியெங்கே கடன்பாக்கி யெங்கே
ஊதும் சிக்கியெங்கே சைவநீதமெங்கே தர்க்கவாதமெங்கே ஜாதி
பேத மெங்கே சுத்தவீரமெங்கே திதிவாரமெங்கே வியாபாரமெங்
கே யெதிர் போட்டியெங்கே ராஜபேட்டியெங்கே மனையாட்டி
யெங்கே பொய்மாயம். இத்தரைவாழ்விது சொற்பனமாமே இர
வியைக்கண்டவுடனிருளதுபோமே வித்தகமுடன் குமாரானந்த
ன்றுமே. விளம்புங் கீர்த்தனமதைத்தா நம்புவோமே மெத்தவே
பிரசித்திபெற்ற நித்தியப்பிரமத்திலுற்ற மேன்மைஞானதியான
மோனவாண்மையே, யெப்போதுங்கான விஞ்சைமந்திரந்திகழ்ந்
திலங்குமங்களந்துலங்கும் ரஞ்சிதங்குலாவுந் தெய்வக்குஞ்சரிக்கு
கந்தநண்பன் விருதுகொடிப் பரத நாட்டிற் கருத நீட்டிக்கலியை
யோட்டி (பக்தி)

126651

சாற்றுக்கவி.

(அறுசீர்களிநெடிலடியாசிரிய விருத்தம்.

தருமானந்தமாம் விஜயமங்கலத்திற் ஸ்வாமிகள் மேற்
பரமானந்தமான தமிழ்பஜனாமிர்தப் பக்திரசம்
பெருமானந்தக் கீர்த்தனையைப் பிரியமாக வேயுரைத்தான்
திரமானந்தமாங் குறிஞ்சிக் குமாரானந்த சேகரனே.

S. A. கணேசன்,

இதன் விலை அணா 0—2—0.

இந்தப்புஸ்தகம் கிடைக்குமிடம்:—

V. S. நடேச முதலியார்,

பாங்கு,

விஜயமங்கலம். P. O